<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

<u>நாள் – 14.10.2024</u>

OS.176/2017

**வா.சா.1, ராஜிவ்காந்தி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. 07.03.2007 ம் தேதியிட்ட தான செட்டில் மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5

மேற்க்கண்ட ஆவணத்தை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து பிரதிவாதி வேலுவுக்கு பாத்தியம். தாவா சொத்து வேலுவிற்கு எவ்வாறு பாத்தியம் என்பது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பிரதிவாதிக்கும் அவரது பிள்ளைகளுக்கும் பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்றால் அதை என்னால் மறுக்க முடியாது. ஆனால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் பார்த்திருக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், பட்டா எண், நான்கு எல்லைகள் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா விசாரணை வந்த பிறகாவது தாவா சொத்தின் எல்லைகள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து தொடர்பாக ஏதேனும் ஆவணங்களை பார்த்தேனா என்றால் ஆனால் தற்போது நினைவில்லை. எந்த ஆவணத்தை பார்தேன் என்று சொல்லமுடியுமா என்றால் தெரியாது.

தாவா சொத்தை வேலுவின் வீட்டில் வைத்து விலை பேசினோம். வேலுவின் வீடு அக்ரஹாரத்தில் உள்ளது. விலை பேசியபோது ரைஸ்மில் வைத்துள்ள சண்முகம், துரை ஆகியோர் இருந்தார்கள். வேறு யார் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சண்முகம், துரை ஆகியோரை நான்தான் அழைத்து சென்றேன். எந்த நேரத்தில் அழைத்து சென்றேன் என்று குறிப்பாக ஞாபகம் இல்லை. 3 ஏக்கர் நிலத்தை விற்பதாக பிரதிவாதி கூறினார். வியாபாரம் பேசும் போது பிரதிவாதியின் மனைவி, பிள்ளைகள் இருந்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு நிலத்தை விற்பதாக பிரதிவாதி கூறினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. முன்பணமாக ரூபாய் 2 இலட்சம் கொடுத்தேன். 2 இலட்சமா அல்லது 3 இலட்சமா என்று ஞாபகம் இல்லை. மேற்படி பணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். டோக்கன் அட்வான்ஸாக ரூபாய் ஆயிரத்து ஒன்றை வீட்டில் வைத்து கொடுத்தேன்.

அன்றைய தினமே கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு முன் பணத்தை கொடுத்தேன். 3 மாதத்தில் பாக்கி தொகையை செலுத்தி கிரையம் செய்து கொள்வது என பேசப்பட்டது. 3 மாதத்தில் பாக்கி பணம் கொடுக்க சென்னையில் இருந்து வந்தேன். பாக்கி பணம் கொடுக்கவில்லை. கிரையம் செய்து கொடுக்க பிரதிவாதியை கேட்ட போது அவரது மகள்கள் இருவரும் படிப்பதற்காக கல்லூரிக்கு சென்றுவிட்டதாகவும், அவர்கள் வந்த பிறகு கிரையம் செய்து கொள்ளலாம் என கூறிவிட்டார். பிரதிவாதியின் மகள்கள் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியிடம் கிரைய ஒப்பந்தத்தில் நீங்கள் மட்டும் தான் கையொப்பம் செய்திருப்பதாகவும், அவரது மகள்கள் கையொப்பம் செய்ய வில்லை என்பதால் நீங்களே கிரையம் செய்து கொடுக்குமாறு பிரதிவாதியை கேட்டீர்களா என்றால் கேட்டேன். அவ்வாறு நான் பிரதிவாதியை கேட்ட போது என்னுடன் யார் இருந்தார்கள் என்று எனக்கு நினைவில்லை.

பிரதிவாதி எதற்காக விற்பனை செய்ய வந்தார் என்று எனக்கு தெரியாது. 3 மாத கால அவகாசம் நான் தான் கேட்டேன். 3 மாத காலத்திற்குள் நான் கிரையம் செய்து கொடுக்க வழக்கறிஞரை வைத்து சட்ட அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பிற்கு பதில் சட்ட அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. 30.11.2016 ல் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளதை மறைத்து பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டு ஒரு வருடம் கழித்து தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எவ்வளவு நாள் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்று ஞாபகம் இல்லை. இன்றுவரை பாக்கி தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். பாக்கி தொகையை வைத்து கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருந்ததாக கூறியுள்ள நிலையில் மேற்படி பாக்கி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யாததற்கு காரணம் அவ்வாறு வைப்பீடு செய்வது குறித்து எனக்கு தெரியாது.

அரூர்–தருமபுரி செல்லும் தார்சாலையில் எச். அக்ரஹாரம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் தாவா சொத்து உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் பெட்ரோல் பங்க் மற்றும் தாவா சொத்திற்கு எதிரில் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் தற்போது தான் வைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம் நான் ஒப்பந்தம் போடும் காலத்திலேயே இருந்தது. நான் ஒப்பந்தம் போடப்பட்டதாக கூறும் காலத்திலேயே மேற்படி சொத்து ஏக்கர் 1 க்கு ரூபாய் ஒரு கோடி போகும்

என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 2016 ம் வருடத்திலேயே எவ்வளவு மதிப்பு என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் போடும் காலத்திலேயே ஒப்பந்த சொத்து ரூபாய் 3 கோடி என்றாலும், அத்தகைய சொத்தை ரூபாய் 9 இலட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்பது பிரதிவாதியை மோசடி செய்வதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூபாய் 2 இலட்சம் கடன் கேட்டாரா என்றால் இல்லை. பிரதிவாதி அவசர செலவிற்தகாக என்னிடம் ரூபாய் 2 லட்சம் கடன் கேட்டதற்கு நான் கடனுக்கு ஆதரவாக தாவா சொத்தை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுக்குமாறு கேட்டதால் தான் தாவா கிரைய ஒப்பந்தம் பிரதிவாதியால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. கடன் பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் ஒப்புக்காக ஏற்படுத்தப்பட்டதால் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்க உட்பட்டதல்ல என்றால் சரியல்ல. அதற்காகத்தான் தாவா சொத்தை கிரையம் செய்து கொள்ள எப்போதும் நான் தயாராக இல்லை என்றாலும் பாக்கி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து 3 சர்வே எண்களை சேர்த்து 4.62 ஏக்கர் அதில் 3 ஏக்கர் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ஒப்பந்தப்பத்திரத்திலோ தாவாவிலோ, 4.62 ஏக்கரில் 3 ஏக்கருக்கான செக்குபந்தியை குறிப்பிட்டு கூறிவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் தாவா சொத்து கிரையம் பெற நினைத்திருந்தால் கிரைய ஒப்பந்தத்தில் தாவா சொத்திற்கான செக்கு பந்தியை குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் கடனுக்கு பொறுப்பாக எழுதப்பட்டதால் செக்கு பந்தி குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் ரூபாய் 2 இலட்சத்திற்கு வட்டியுடன் திருப்பி கொடுக்க தயாராக இருந்தும் பணத்தை பெற்றுக்கொள்ளாமல் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.ASSEEN BANU,
Sub Judge, Harur